இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in — நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி — murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 108 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 12 – புதன்கிழமை 27 நவம்பர் 2024 – திருச்சி ★★ 64 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 108: Thiruvalluvar Year - 2055 - Karthigai 12 - Wednesday 27 November 2024 - Trichy ★★ 64 Pages ₹5.00


## மழையை எதிர்கொள்ள

# அரசின் அனைத்து ஏற்பாடுகளும் தயார்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.11.2024) மாற்றுத்திறனாளிகள் நலத்துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ், சென்னை, சோழிங்கநல்லூர், கண்ணகி நகரில், மாற்றுத்திறனாளிகளுக்கு உடல் / மனம் சம்பந்தப்பட்ட மறுவாழ்வு சேவைகள் வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள விழுதுகள் – ஒருங்கிணைந்த சேவை மையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகரராஜா, க.கணபதி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் திருமதி எம்.லக்ஷ்மி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே.விஜயகார்த்திகேயன், மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் இரா.சுதன் (ஓய்வு), மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, நவ. 27 -**

**“மழையை எதிர்கொள்ள அரசின் அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.11.2024) மாற்றுத் திறனாளிகள் நலத்துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ், சென்னை, சோழிங்கநல்லூர், கண்ணகி நகரில், மாற்றுத் திறனாளிகளுக்கு உடல்/மனம் சம்பந்தப்பட்ட மறுவாழ்வு சேவைகள் வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள விழுதுகள் - ஒருங்கிணைந்த சேவை மையத்தை திறந்து வைத்தார்.

மாற்றுத்திறனாளிகளின் நலனைப் பேணிக் காத்திட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதல் முறையாக மாற்றுத்திறனாளிகளின் நல்வாழ்விற்காக தனித் துறையை உருவாக்கினார். மேலும், அவர்கள் உரிய மரியாதையுடன் அழைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு “மாற்றுத்திறனாளிகள்” என்ற சொல்லையும் அறிமுகப்படுத்தினார்.

இந்த ஒருங்கிணைந்த சேவை மையத்தில் முதன்முறையாக மாற்றுத்திறனாளிகளின் உடல் மற்றும் மனம் தொடர்பான நாள்பட்ட மறுவாழ்வு தேவைகளை நிறைவேற்றும் வகையில், மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்புக் கல்வி, கண்பார்வை அளவியல், கேட்டல் மற்றும் பேச்சுப்பயிற்சி, இயன்முறை, செயல்முறை மற்றும் உளவியல் ஆகிய ஆறு மறுவாழ்வு சேவைகள் ஒரே இடத்தில் வழங்கப்படுவதோடு, இச்சேவைகளை வழங்க வல்லுநர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இம்மையம் முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது.

2023-24 இல் கள அளவில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பு பணியின் போது, கண்டறியப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணையின்படி, இம்மையத்தில் சேவைகள் வழங்கப்படும். இம்மையமானது பெருநகர சென்னை மாநகராட்சியின் பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் உள்ள மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் அனைத்து அணுகல் வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த பேட்டி!

பின்னர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது–

நாடாளுமன்றத்தில் எழுப்ப வேண்டிய பிரச்சினைகள் குறித்து தி.மு.கழக எம்.பி.க்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் கழக எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டு மக்களின் பிரச்சினைகள் குறித்து குரல் எழுப்புவார்கள்.

மேலும் மழையை எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மழையை எதிர்கொள்ள தமிழ்நாடு அரசு தயாராக உள்ளது.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

# தமிழ்நாடு சட்டப்பேரவை டிசம்பர் 9ஆம் தேதி கூடுகிறது!

## சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு பேட்டி!

சென்னை, நவ. 27 –

சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டமன்றப் பேரவைத் தலைவர் அலுவலகத்தில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், சட்டப்பேரவை கூட்டத் தொடர் வருகின்ற டிசம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் 9ஆம் தேதி 9.30 மணிக்கு துவங்கவுள்ளது என்றார். மேலும் அலுவல் ஆய்வு கூட்டத்தில் எத்தனை நாட்கள் கூட்டம் நடைபெறும் என்பதை கூடி முடிவு செய்யும் எனவும் தெரிவித்தார்.

சட்டப்பேரவை நிகழ்ச்சி நேரலை மற்றும் வெளிநாட்டு சுற்றுப்பயணம் குறித்த கேள்விக்கு பதிலளித்த சபாநாயகர், தமிழ்நாடு முதல்வர் அவர்கள் வந்த. பின்பு தான் நேரலை செய்யும் முறை வந்துள்ளது.

முழுமையாக நேரலை செய்வது தொடர்பாக படிப்படியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார். மேலும் வெளிநாடுசுற்றுப்பயணத்தின் போது AI தொடர்பாக பேசும் வாய்ப்பு கிடைத்தது. தமிழகம் AI தொழில் நுட்பத்தில் முதன்மை மாநிலமாக உள்ளது. மாணவர்களுக்கு இது பயனளிக்கும் அதேபோல் சட்டப்பேரவையிலும் காகிதமில்லாத முறை உள்ளது என்றார். இந்த சந்திப்பின்போது சட்டப்பேரவைச் செயலாளர் சீனிவாசன் உடன் இருந்தார்.

## கழகத்தினர் – இளைஞர் அணியினர் – பொதுமக்கள் அனைவரும் ‘குறிஞ்சி’ முகாம் அலுவலகத்தில் கூடி வாழ்த்துகின்றனர்!

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் இன்று!

## தமிழ்நாடு முழுவதும் கழகத்தினர் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

**சென்னை, நவ. 27 -**

**“கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை இன்று ‘குறிஞ்சி’ முகாம் இல்லத்தில் கூடி 48-ஆவது பிறந்தநாளில் வாழ்த்தி மகிழ்வோம்” என்று கழக இளைஞர் அணி விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளது.**

கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது 48வது பிறந்தநாளை முன்னிட்டு, `குறிஞ்சி’ இல்லத்தில் தொண்டர்களிடம் வாழ்த்துப் பெறுகிறார் என்று கழக இளைஞர் அணி அறிவிப்பு விடுத்துள்ளது.

திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்தநாள் விழா இன்று (நவம்பர் 27) தமிழ்நாடு முழுவதும் மிகச்சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

### வலுவாகக் கட்டமைத்து வழிநடத்தி வருகிறார்!

முதலமைச்சர் அவர்களுக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டு மக்களுக்கும் துணையாக, துணை முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, வரும் பிறந்தநாள் என்பதால், தொண்டர்களும் இளைஞர் அணியினரும் நலத்திட்ட உதவிகள் முதல் இரத்ததான முகாம்கள் வரை பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் இளைஞர் அணிச் செயலாளரின் பிறந்த நாளை உற்சாகமாகக் கொண்டாடி வருகிறார்கள்.

2019ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து, கழகத்தினரின் வேண்டுகோளின்படியும் தலைமைக் கழகத்தின் முடிவின்படியும் கழகத் தலைவர் அவர்களின் நம்பிக்கையைப் பெற்று, அதே ஆண்டு ஜுலை 4 அன்று மாநில இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்றார், நம் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

இன்றைய கழகத் தலைவர் அவர்கள் வகித்த பொறுப்பு என்பதை மனதிலேந்திப் பணியைத் தொடங்கிய அவர், இளைஞர் அணியை ஆற்றல் குன்றாமல் கழகத்தின் பாசறையாக வலுவாகக் கட்டமைத்து வழிநடத்தி வருகிறார்.

25 லட்சம் புதிய இளைஞர்களை உறுப்பினர்களாகச் சேர்த்தது, இளைஞர் அணி உறுப்பினர்களுக்கு மாவட்ட அளவில் பயிற்சிப் பாசறைக் கூட்டங்களை நடத்தியது, அரசியலுக்கு அப்பாற்பட்டு, கைவிடப்பட்ட நீர்நிலைகளைத் தூர்வாரும் பணிகளை முன்னின்று நடத்தியது; குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கு எதிரான போராட்டம்; நீட் தேர்வை ஒழிக்க கையெழுத்து இயக்கம், இந்தித் திணிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டம் என களத்திலும் தொய்வின்றிச் செயலாற்றி வருகிறது இளைஞர் அணி.

குறிப்பாக, 2007இல் இன்றைய கழகத்தலைவரால் நெல்லையில் நடைபெற்ற இளைஞர் அணியின் முதல் மாநில மாநாட்டின் தொடர்ச்சியாக, 2024இல் சேலத்தில் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டை சேலத்தில் எழுச்சியுடன் நடத்திக் காட்டினார் .



இளைஞர்களுக்கு கழகக் கொள்கைகளைக் கொண்டு சேர்க்கும் வகையில், தொகுதிதோறும் திராவிட மாடல் பயிற்சிப் பாசறைக் கூட்டம், வாசிப்பை விரிவுபடுத்த சட்டமன்றத் தொகுதிகள் தோறும் `கலைஞர் நூலகம்’, `முரசொலி பாசறைப் பக்கம்’, `முத்தமிழறிஞர் பதிப்பகம்’ என்று ஏராளமான பணிகளை முன்னெடுத்திருக்கிறார் கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள்.

### 182 பேச்சாளர்கள் தேர்வாக வழி வகுத்தார்!

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர் இட்ட ஆணையை ஏற்று கழகத்திற்கு 182 இளம் பேச்சாளர்களைத் தேர்வு செய்து கொடுத்தது மட்டுமல்லாமல் அந்த 182 பேச்சாளர்களும் கழகக் கொள்கைகளைத் திசைகள்தோறும் மக்களிடம் கொண்டு செல்லும் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார் கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள்.

ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் வாரியாக திராவிட மாடல் பயிற்சிப் பாசறைக் கூட்டங்களை நடத்துவது, 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் தலைமையிலான கூட்டணி 200 தொகுதிகளுக்கு மேல் வெல்வதற்கு மேற்கொள்ள வேண்டிய ஆக்கப்பூர்வ செயல்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு ஆயத்தமாகிக் கொண்டு வருகிறது கழக இளைஞர் அணி.

ஒரு புறம் இளைஞர் அணி பணிகள் என்றால், இதற்கு கொஞ்சமும் சளைக்காமல் துணை முதலமைச்ச ராக மிகச்சிறப்பாக செயலாற்றி வருகிறார், கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள்.

### குறிஞ்சி இல்லத்தில் தொண்டர்களுடன் சந்திப்பு!

திராவிட மாடல் அரசில் துணை முதல மைச்சராகப் பணிகளைத் தொடங்கிய பிறகு. தொடர் ஆய்வுகள், பல்வேறு புதிய திட்டங்கள், மழை வெள்ள நிவாரணப் பணிகள் என அரசு சார்ந்த பணிகளையும் ஓய்வில்லாமல் கவனித்து வருகிறார் கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள்.

இந்நிலையில் எளியவர்களின் எழுச்சியையே தனது எழுச்சியாகக் கருதி நாளும் உழைத்து வரும் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய பிறந்தநாளான இன்று (27ஆம் தேதி) தனது `குறிஞ்சி’ இல்லத்தில் தொண்டர்களைச் சந்திக்கின்றார்.

உரிய பாதுகாப்பு வசதிகளுடன் காலை 9.30 மணிக்குத் தொடங்கும் வாழ்த்துப்பெறும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் சென்னை தென் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த. வேலு தலைமையில் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு குன்றாமல், இந்நிகழ்வில் தொண்டர்கள் அனைவரும் பங்கேற்று, கழக இளைஞர் அணிச் செயலாளருக்கு உங்கள் பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவிக்கலாம்.

தமிழ்நாடு முழுவதும் இருக்கும் கழகத் தொண்டர்கள், இளைஞர் அணியினர், பொதுமக்கள் அனைவரும் இன்று (27ஆம் தேதி) `குறிஞ்சி முகாம்’ அலுவலகத்தில் கூடி, கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் 48வது பிறந்தநாளில் வாழ்த்தி மகிழ்வோம்.

இவ்வாறு கழக இளைஞர் அணி தெரிவித்துள்ளது.

### தமிழ்நாடு முழுவதும் நலத்திட்ட உதவிகள்!

தமிழ்நாடு முழுவதும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று கழகத்தினர் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.